**தொடன்கொட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொடன்கொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத ரூபா 3,969,731 தொகைக்காக மீளாய்வாண்டின் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் நானாவித கடன் கொடுத்தோர் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவினத் தொகையான ரூபா 547,602 இற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை குறைவாகப் பட்டியல் இடப்பட்டிருந்த முத்திரைக் கட்டணத்தின் சீராக்கமாகக் காண்பித்து ரூபா 14,438,404 தொகையான முத்திரைக் கட்டணம் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், முத்திரக் கட்டணக் கணக்கு பகுப்பாய்வு செய்யப்படுகையில் பட்டியல் இடப்பட்டதைப் பார்க்கிலும் அதிகமாக பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 12,172,314 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,035,198 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,569,579 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2 ஆண்டுகளுக்கு மேல் காலாவதியான ரூபா 2,340,569 தொகையான வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 3,453 | 2,063 | 5,948 |
| (ii) | வாடகை | 583 | 467 | 136 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 109 | 162 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | -- | -- | -- |

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ள இறைச்சிக் கடை வாடகை மற்றும் கடைகளின் வாடகை நிலுவை மீதி ரூபா 41,334 மேற்குறித்த வாடகை மீதிக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வீதவரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி நிலுவை மீதி ரூபா 5,947,675 தொகையானதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 24 ஆம் திகதி இதில் ரூபா 1,112,252 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இந் நிலுவை மீதியில் ரூபா 5,000 இற்கு மேலான மீதியுடன் 225 வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன் இதன் கூட்டுத்தொகை ரூபா 4,381,077 ஆகக் காணப்பட்டது.

**2.3.3 ஏக்கர் வரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான ஏக்கர் வரி மீதி ரூபா 579,119 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 1,000 இற்கு மேலான நிலுவை மீதியுடன் ஏக்கர் வரியாளர்கள் 136 பேர் இருந்தனர்.

**2.3.4 வியாபார நிலைய வாடகை**

(அ) சபுகஹவத்த வியாபார தொகுதியின் கடைகளிற்காக மதிப்பீட்டுப் பெறுமதி 5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அப் 14 கடைகளில் 8 கடைகளில் 2012 யூன் மாதத்தில் இருந்து 2013 ஏப்ரல் வரையிலும், மேலும் ஓர் கடை 2013 முதல் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி வரையிலும் வாடகைக் குடியிருப்பாளர் எவரும் வாடகை செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி கணக்காய்வுக் களஞ்சிய ஆய்வின் போது 07 கடைகள் மாத்திரம் வியாபாரத்திற்காக திறக்கப்பட்டிருந்ததுடன் 02 கடைகள் மூடப்பட்டிருந்த போதிலும் அவை வியாபாரப் பொருட்களுடனானவையாகக் காணப்பட்டதுடன் 06 கடைகள் எந்தவித வியாபாரப் பொருட்களும் இன்றி வெற்றுநிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 13,717,529 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,772,392 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) பியகரு புறவர செயற்திட்டம்**

பியகரு புறவர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நகர பூங்காவை அலங்கரிப்பதற்காக சபை ரூபா 497,840 தொகையான மதிப்பீட்டைத் தயாரித்து செயற்திட்டத்தை மேற்கொண்டிருந்தது.
அடிப்படை மதிப்பீடு திருத்தப்பட்டு அல்லது மேலதிக வேலை அங்கீகரித்துக்கொள்ளப்படாது 06 பூங்கா வாங்கில்கள் 2014 செப்தெம்பர் 05 ஆம் திகதி ரூபா 143,975 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 26 ஆம் திகதி தொழில்நுட்ப

உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது 02 வாங்கில்களில் 06 இடங்களில் பதப்படுத்தப்பட்ட மரம் வெடித்துக் காணப்பட்டதுடன் வங்கியின் இரும்புப் பகுதிகளில் துருப்பிடித்துக் காணப்பட்டது. இவ் வாங்கில்கள் சிறந்த தரத்தில் காணப்பட்டமைக்கு கொடுப்பனவின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 799 சீ 300 அலதுவ ஒருவ திப்பகொட வீதி**

மக நெகும கிராமிய வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 தொகையான மதிப்பீட்டிற்கு மேற்குறித்த வீதி வடிவமைப்புக் கற்கள் இடப்பட்டிருந்தன. மதிப்பீட்டின் படி, வீதியின் நீளம் 86 மீட்டர்களாகவும் அகலம் 2.5 மீட்டர்களாகவும் காணப்பட்டது. ஒப்பந்தக்காரர்களால் 2014 திசெம்பர் 07 ஆம் திகதி செயற்திட்டத்தின் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 பெப்ரவரி 26 ஆம் திகதி வீதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் பௌதீக மெய்மையாய்வின் போது 1 ½ சதுர மீட்டர் படியான 04 இடங்களில் வீதியில் உள்ள கற்கள் புதையுண்டிருந்தன. எவ்வாறெனினும், மதிப்பீட்டின் விடய இல. 1-2 இன் படி, வீதி மட்டப்படுத்தப்பட்டு தயாரிப்பதற்காக ரூபா 20,079 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கொடுப்பனவு அறிக்கையின் படி, மேற்குறித்த செயற்பாட்டிற்காக ரூபா 19,500 தொகை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீதியின் இரு மருங்கிலும் குடியிருக்கும் குடியிருப்பாளர்களால் வீதியை நிர்மாணிக்கையில் வீதி அமுக்கப்படாது கற்கள் பதிக்கப்பட்டதாகவும் மழையின் போது வீதி தாழ்வுற்றுள்ள பகுதிகளில் நடந்து செல்ல முடியாத அளவிற்கு மழை நீர் தேங்குவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மகநெகும ஆலோசனைக் கையேட்டின் படி இருமருங்கிலும் பொருத்தப்பாடு அற்ற வகையில் வீதியின் தோள் மட்டத்தில் மண் நிரப்பப்பட வேண்டிய போதிலும் முழுமையாக 35 மீட்டர்கள் நீளமான அளவில் நிலம் வீதியின் தோள் அளவிற்குக் காணப்பட்டதுடன் எஞ்சிய அளவில் வீதியின் இரு மருங்கிலும் தோள் மட்டத்தில் காணப்பட்டதுடன் வெற்று நிலையில் காணப்பட்டது. இதன் படி, இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, இதற்காக ரூபா 5,000 தொகை பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

**(இ) இல 719 ஏ அல்பட் தோட்ட வீதி**

மகநெகும கிராமிய வீதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 தொகையான மதிப்பீட்டிற்கு மேற்குறித்த வீதி வடிவமைப்புக் கற்கள் இடப்பட்டிருந்தன. மதிப்பீட்டின் படி, வீதியின் நீளம் 86 மீட்டர்களும் அகலம் 2.5 மீட்டர்களுமாகக் காணப்பட்டன. ஒப்பந்தக்காரர்களால் 2014 திசெம்பர் 02 ஆம் திகதி செயற்திட்டத்தின் வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதியில் வடிவமைப்புக் கற்கள் பதிக்கப்படுகையில் வீதி பதனிடப்பட்டு அமுக்கப்படுவதற்காக ரூபா 20,078 தொகையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதே அளவில் கொடுப்பனவிற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் முடிவுற்று 02 மாதங்களிற்குள் சில இடங்களில் கற்கள் மேலே கிளம்பிக் காணப்பட்டன.

(ii) கற்களின் தூள் இடப்படுவதற்காக ரூபா 38,111 தொகையான கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இவை போதுமான அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் விடய இல. 2.7 இன் படி, இரு மருங்கிலும் மண் நிரப்பப்படுவதற்காக ரூபா 5,000 தொகை கொடுப்பனவு செய்யப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் முதல் 34.3 மீட்டர்கள் வரை அவ்வாறு மண் நிரப்பப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இரண்டாவது 51 மீட்டரின் போது வீதியின் இரு மருங்கிலும் கற்கள் பதிக்கப்பட்டு தொள் மட்டம் இடப்பட்டிருந்தமையால் அதில் மண் நிரப்பப்படுவதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை.

(iv) மேலே முதலாம் வீதியின் படி இங்கு போக்குவரத்துக் கட்டணத்திற்காக ரூபா 28,810 தொகை மதிப்பிடப்பட்டு, கொடுப்பனவிற்காகவும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்குறித்த வீதி போக்குவரத்துச் சிரமத்துடனான வீதி ஒன்று அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

(அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலும் 2011 ஆம் ஆண்டில் முறையே செலுத்தப்பட்டிருந்த ரூபா 173,523 தொகையும் ரூபா 2,000 தொகையுமான முற்பணத் தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, 9 வகையான பொருட்களின் 1899 அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக சபையில் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

## 3.3 பிரதேச சபை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

2014 ஆம் ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சால் ரூபா 3,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. வாராந்த சந்தை, கழிவுப் பொருள் முகாமைத்துவம், வடிகால் முறைமை, துணை வீதிகள், சிறுவர் பூங்கா, பொது சுகாதார மற்றும மலசல கூட வசதிகள் போன்ற மக்கள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கானதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 24 ஆம் திகதி வரையிலும் ரூபா 2,506,043 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக வாகனப் பழுதுபார்த்தல்கள், வாகனத்திற்காக டயர் கொள்வனவு, வாகனத்திற்காக எரிபொருள் வழங்கலுக்காக ரூபா 1,646,165 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2 டயர்களுக்காக ரூபா 170,400 தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 4 டயர்கள் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) டயர் கொள்வனவு செய்யப்படுவதுவும் வாகன உதிரிப் பாகங்களின் கொள்வனவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4 வாகனக் கட்டுப்பாடு**

---------------------

2014 ஆம் ஆண்டின் போது JCB இயந்திரத்திற்காக பழுதுபார்த்தல் செலவினங்கள், வருமான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டணங்களிற்காக ரூபா 1,168,569 தொகையும், 5520 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 657,448 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் இயந்திரம் 2014 ஆம் ஆண்டின் போது 9,918 மணித்தியாலங்கள் இயக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது JCB இயந்திரத்தின் பயன்பாட்டுப் பதிவேட்டு பரீட்சிப்பின் போது இயந்திரம் மேற்குறித்த 9,918 மீற்றர்களும் சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வடிகால்கள் வெட்டப்படுவதற்காக் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கான மதிப்பீடும் எதிர்கால வேலைத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு செயற்பாட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த சில செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிராத போதிலும், இயக்கத்தின் போது மீற்றர் மணித்தியாலம் பதிவு செய்யப்பட்டு எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்களிற்கு உரித்தான வீதி அபிவிருத்திக்காக ஓட்ட அட்டவணைகளில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக எந்தவித வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயலாற்றல்**

---------------------

மகநெகும வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 06 செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டிற்காக பிற்போடப்பட்டிருந்தன. இவ்வாறே 2014 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 158 செயற்திட்டங்களும், அவ் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிராமையால் 2015 ஆம் ஆண்டிற்காக பிற்போடப்படுவதற்கு சபையால் துறைமுகங்கள் மற்றும் நெடுந்தெருக்கள் அமைச்சினால் கோரப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 26 ஆம் திகதி வரையிலும் அவை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) வருமான நிருவாகம்

(iii) வாகனப் பயன்பாடு

(v) ஒப்பந்த நிருவாகம்